அரசாங்க மருத்துவ மனைகள்

*112 வினு—திரு. ந. தருமலிங்கம்: மதிப்பிற்குரிய பொதுச் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா ?

திருத்துறைப்பூண்டி அரசாங்க மருத்துவ மனையில் கடந்த சில ஆண்டுகளாக எம்.பி,. பி.எஸ்., டாக்டர்கள் இல்லை என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆம்.

திரு. ந. தருமலிங்கம்: தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி அரசாங்க மருத்துவ மனையில் கடந்த சில ஆண்டுகளாக எம்.பி.பி.எஸ். டாக்டர்கள் இல்லை என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நான் முதலில் குறிப்பிட்டது போல, சர்க்காருக்குத் தெரியும்.

DR. H. V. HANDE; Since when the Civil Assistant Surgeon was not there and was no other doctor sent to the hospital ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA; I want to clear the doubt of my hon. Friend. There is a doctor in the hospital. But the complaint is that there is no doctor with M.B.B.S. qualification. There are two Government institutions in Tiruthuraipundi namely the Government Hospital and the Government Women and Children Dispensary. The sanctioned posts of medical officers are one male Medical Officer for the former institution and a Woman Medical officer for the latter institution. In the post of Male Medical Officer there is a doctor with D.M.S. qualification, and in the post of Woman Medical Officer there is a doctor with L.I.M. qualification.

திரு. சி. கோவிந்தராசன்: தலைவர் அவர்களே, அரசாங்க மருத்துவ மனைகளில் தேவையான மருந்துகள் இல்லாத காரணத்தினால், ஏழை மக்களுக்கு அரசாங்க மருத்துவ மனைகளால் எந்தவிதப் பயனும் இல்லை. இதைப் போக்க அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்த அரசாங்கம் பொறுப்பு எடுத்துக்கொண்ட பிறகு அரசாங்க மருத்துவ மனைகளுக்குப் போதிய மருந்துகளை அனுப்ப முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. மா. இராசாங்கம்: தலைவர் அவர்களே, தமிழக சர்க்கார் மருத்துவ மனைகளில் இந்த எம்.பி.பி.எஸ். டாக்டர்கள் தங்குவதற்கு இல்ல வசதி இல்லாத காரணத்தினால் பல இடங்களில் அவர்கள் தங்காமல் அடிக்கடி லீவு போட்டுவிட்டுப் போய்விடுகிறார்கள். ஆகவே அவர்களுக்குத் தங்கும் வசதிகளை ஹாஸ்பிட்டல் காம்பவுண்டுக்குள் முடிந்த வரையில் செய்துகொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அது பற்றி விரிவாக அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. துரித காலத்தில் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

THIRU K. VINAYAKAM: Is it not a general malady that qualified doctors like Civil Assistant Surgeons do not want to go from the metropolis to rural parts. What steps have been taken to make them go to rural parts and make living there attractive and will the Government think of the possibility of making it a condition, while making admission to the medical colleges, that those who pass the course will have to serve at least for five years in the rural parts so that there may not be this apathy in our country ?

[1967, ஜூன் 30

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்கள் பரிசீலனைக்கு உரியவை. பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கலாம் என்று கருதுகிறேன்.

திரு. ஜெ. பெள்ளி கௌடர் : ஸார், டாக்டர்கள் இல்லாத ஆஸ்பத்திரிகள் ஏராளமாக இருந்துகொண்டிருக்கின்றன. அந்தக் குறையைப் போக்க சர்க்கார் தீவிரமான நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : டாக்டர் இல்லாத மருத்துவ மனைகள் ஏராளமாக இருக்கின்றன என்று கூறுவது தவறானது. டாக்டர்கள் இல்லாத இடங்களில் டாக்டர்களைப் போட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எங்காவது டாக்டர் இல்லை என்று குறிப்பாக கனம் உறுப்பினர் தகவல் கொடுத்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி மருத்துவ மனை, தாலுகா தலைநகர மருத்துவ மனை பல ஆண்டுகளாக அங்கு எம்.பி.பி.எஸ். டாக்டர் போடுவதே இல்லை. இனிமேலாவது போட அரசாங்கம் ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மருத்துவ மனையில் டி.எம். அண்ட் எஸ். படித்த டாக்டர் போடப்பட்டிருக்கிறது. எம்.பி., பி.எஸ். படித்தவரைத்தான் போடவேண்டும் என்ற விதிமுறை கிடையாது. அங்கு பணி புரியும் டாக்டர் திருப்திகரமாகப் பணிபுரிவதால் தற்போது எம்.பி., பி.எஸ். படித்த டாக்டரைப் போடும் உத்தேசம் இல்லை.

Thiru T. Martin : May I request the Hon. Minister to state whether there is any proposal to associate Homoeopathy doctors with Government hospitals in view of the shortage of Civil Assistant Surgeons ?

The Hon. Thiru S J. Sadiq Pasha : There is no such proposal at present.

113. வினா—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மதிப்பிற்குரிய பொதுச் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) சிதம்பரம் டவுன் அரசாங்க வைத்திய நிலையத்தை இட நெருக்கடி காரணமாக வேறு இடத்திற்கு மாற்றும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) தேவையான நிலத்தைக் கைவசப்படுத்தி, புதிய மருத்துவ மனைக்குரிய கட்டிடங்களைக் கட்டிய பிறகே, மருத்துவ மனை இருக்கும் இடத்தை மாற்ற இயலும்.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : ஸார், இது வரையில் இந்தக் கட்டடத்தை அமைக்காததன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நில ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆர்ஜிதம் செய்யப்பட்ட பிறகு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. எம். பூபதி : சிதம்பரம் ஆஸ்பத்திரியில் மட்டும் இட நெருக்கடி என்பது இல்லை. பொதுவாகவே சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் இட நெருக்கடி இருக்கிறது. குறிப்பாக கோவையிலே 700 பெட்கள் இருக்கின்றன.